2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் எல்லாம் தொழில்முனைவோர் தொழில் தொடங்க முன்வருவது இல்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு இராமநாதபுரம் பகுதிகளிலிருந்து மற்றும் துணிநூல் துறை சார்ந்த அதிகளவிலான முதலீட்டாளர்கள் வந்திருக்கின்றார்கள். அதைப் போல, இந்த இடத்திலும் முதலீட்டாளர்கள் முன்வரக்கூடிய நிலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதியிலே உள்ள படித்த இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மானாமதுரை என்பது எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்களின் மாறாத எஃகு கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

267—

பூங்காவை மேம்படுத்துதல்

***34794—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 15

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு அணையிலுள்ள பூங்காவை சுற்றுலாத் துறையின் மூலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு அணைக்கட்டிலுள்ள பூங்காவை சீரமைத்தல் தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

திரு. இ. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேட்டதும் கொடுப்பது" என்பது கிருஷ்ணன் வழி, "கேளுங்கள் தரப்படும்; "தட்டுங்கள் திறக்கப்படும்" என்பது ஏசுவின் வழி. ஆனால், கேட்காமலேயே கொடுக்கின்ற மனித தெய்வம் ஈரேழு உலகத்திலும் எங்கள் அம்மா, எங்கள் அம்மா, அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை சொல்லப்பட்ட வேதங்கள் நான்கு. அவை ரிக், யஜுர், சாம மற்றும் அதர்வண. இன்று அகிலமே சொல்லும் ஐந்தாவது வேதம் அம்மா என்னும் அன்பு வேதம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) விண்ணும், மண்ணும் வியந்து பார்க்கின்றவகையில் சர்வதேச உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திய பாரதி கண்ட புதுமைப் பெண் எங்கள் அம்மாவின் திருவடிகளை வணங்குகிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அம்பாசமுத்திரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேரன்மகாதேவியை புதிய வட்டமாக உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறிக்கொள்கிறேன். தொகுதி

மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மணிமுத்தாறு அணைக்கட்டிலுள்ள பூங்காவை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்ல ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணைக்கட்டிலுள்ள சுற்றுலாப் பூங்காவை சீரமைத்து மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்காக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து ரூபாய் 83 இலட்சம் மதிப்பீட்டிற்கு கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனால், இக்கருத்துருவிற்கு வனத் துறை தடையின்மைச் சான்று அளிக்க மறுத்துவிட்டதால், சுற்றுலாப் பூங்காவை சீரமைப்பது குறித்த கருத்துருமீது மேல் நடவடிக்கை ஏதுமின்றி கைவிடப்பட்டது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வனத் துறை தடையின்மைச் சான்று அளித்தால் இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, சுற்றுலாப் பூங்காவை சீரமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.*

திரு. இ. சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியாவிலேயே தமிழக சுற்றுலாத் துறையை அமைதி பூங்காவாக ஏற்றமும், மாற்றமும் செய்து அழகு பெறச் செய்தது எங்கள் மாண்புமிகு அம்மாவே. என் தொகுதி மக்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி சொல்லி அமர்கின்றேன்.*

[2015 செப்டம்பர் 15

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

268—

விட்டுமனைப் பட்டா

***38559 திரு. மு. முருகன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி வட்டம், கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், பெரியகுளம் குரூப் கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதிகளில் புல எண்கள் 572/5பி1 விஸ்தீரணம் 0.17.0 எக்டேர், 572/5A விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் மற்றும் 572/5பி2 விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் ஆக மொத்தம் 0.53.0 எக்டேர் இடமானது கிராமக் கணக்கில் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசு எனத் தாக்கலாகியுள்ளது. மேற்படி இடத்தில் சுமார் 54 மீனவக் குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடம் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசாக உள்ளதால், கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து, வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*